சென்னை மருத்துவக் கல்லூரிக்கு

# தேசிய தர வரிசைப் பட்டியலில் 10-ஆம் இடம்!

## சான்றிதழை - அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் காண்பித்து வாழ்த்து!

சென்னை, ஆக.14-

சென்னை மருத்துவக் கல்லூரி 2024 ஆம் ஆண்டு, National Institutional Ranking Framework (NIRF) தரவரிசை பட்டியலில் 10-ஆம் இடமும், மாநில அரசுகள் நடத்தும் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் இந்திய அளவில் முதல் இடமும் பிடித்துள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களிடம் சான்றிதழ் காண்பித்து வாழ்த்து பெறப்பட்டது.

இந்தியாவில் உள்ள மொத்த அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எண்ணிக்கை 706, அதில் National Institutional Ranking Framework (NIRF) இல் கலந்து கொண்ட அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 182 ஆகும்.

இந்தியா முழுவதும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அதாவது, தெற்கு பகுதியில் 76 மருத்துவக் கல்லூரிகள், வடக்கு பகுதியில் 43 மருத்துவக் கல்லூரிகள், கிழக்கு பகுதியில் 14 மருத்துவக் கல்லூரிகள், மேற்கு பகுதியில் 49 மருத்துவக் கல்லூரிகள் என்று மொத்தம் 182 அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் விண்ணப்பித்திருந்தது.

இதில் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் 2024-ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரி 10-ம் இடமும், மாநில அரசுகள் நடத்தும் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்லூரிகளின் வரிசையில் இந்திய அளவில் முதல் இடமும் பிடித்திருப்பது சிறப்பிற்குரியது.

கடந்த காலங்களில் 2019-ஆம் ஆண்டு 16-ஆம் இடமும், 2021-ஆம் ஆண்டு 14-ஆம் இடமும், 2022-ஆம் ஆண்டு 12-ஆம் இடமும், 2023-ஆம் ஆண்டு 11-ஆம் இடமும் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு (2024) National Institutional Ranking Framework (NIRF) இல் சென்னை மருத்துவக் கல்லூரி 10-வது இடம் பிடித்துள்ளது சிறப்பிற்குரியது.

இந்த சான்றிதழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களிடம் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணி ராஜன் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு.கவிதா, நோடல் அலுவலர் மரு. அன்புச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை நேற்று (13.08.2024) சென்னை, முகாம் அலுவலகத்தில், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன் சந்தித்து, National Institutional Ranking Framework (NIRF) இல் சென்னை மருத்துவக் கல்லூரி 2024-ஆம் ஆண்டு 10வது இடம் பிடித்ததற்கான சான்றிதழ் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். மாநில அரசுகள் நடத்துகின்ற மருத்துவ இளங்கலை மற்றும் முதுகலை கல்லூரிகளில் இந்திய அளவில் சென்னை மருத்துவக் கல்லூரி முதல் இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு.கவிதா, நோடல் அலுவலர் மரு.அன்புச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில்

# 16 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு!

சென்னை, ஆக.14-

தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு என வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

கோவை, தேனி, திருச்சி, திருப்பூர், சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி, நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.




